செய்தி வெளியீட்டு எண்: 67 நாள்: 05.03.2021

**தேர்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் புகார்களுக்கு 1800 4253 169 மற்றும் 1950 கட்டணமில்லா தொலைபேசி எண்களை தொடபர்பு கொள்ளலாம்- மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப, அவர்கள் தகவல்**

கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட 4 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் புகார்களை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்கள் மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப, அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்படி கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்பட கூடிய தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம், ரிஷிவந்தியம் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் புகார்கள் தெரிவித்திட 04151-224155 04151-224156, 04151-224157, 04151-224158 ஆகிய தொலைபேசி எண்கள் மற்றும் 1800 4253 169 மற்றும் மாநில தேர்தல் ஆணையத்தின் 1950 கட்டணமில்லா தொலைபேசி எண்கள் (Toll Free) ஆகிய தொலைபேசி எண்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.